மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

(இ) பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மற்றும் தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு, 2008 மீதான ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சட்டப் பேரவை விதி 156(1)-காப்புரையின்படி ஆய்வுக் குழு அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டித்தல். மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டப் பேரவை விதி 156 (1)-காப்புரையின்படி, 2008 ஆம் ஆண்டு பி.எஸ்.ஜி. பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 43/2008) மற்றும் 2008 ஆம் ஆண்டு தியாகராஜர் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப பல்கலைக்கழகச் சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 44/2008) ஆகியவை மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவைக்கு அளிப்பதற்கான காலவரையறையினை மேலும் ஆறு மாதங்களுக்கு இப்பேரவை நீட்டிக்கிறது"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2010 நவம்பர் 12

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2-40

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ஆட்சிக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்களிடமிருந்தும், மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. தண்டபாணி அவர்களிடமிருந்தும் முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ராஜ்குமார், திரு. து. ரவிக்குமார் மற்றும் திரு. அ. அருண்மொழிதேவன் ஆகியோரிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

சென்னை மற்றும் மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 6-12-2010 முதல் மூன்று ஆண்டுகள் ஆகும்.